# வண்ணாரப்பேட்டை - விம்கோநகர் மெட்ரோ ரயில்: 2-ஆவது நாளாக ஆய்வு

சென்னை, பிப். 6: சென்னை மெட்ரோ ரயில் முதல்கட்ட விரிவாக்கத் திட்டத்தில், விம்கோ நகரில் இருந்து சுங்கச்சாவடி வரையிலான பணிகள் இரண்டாவது நாளாக சனிக்கிழமையும் ஆய்வு செய்யப்பட்டது.

சென்னையில் அடுத்தகட்டமாக, வண்ணாரப்பேட்டை-திருவொற்றியூர் விம்கோ நகர் வரையிலான முதல் கட்ட மெட்ரோ ரயில் விரிவாக்கத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மொத்தம் 9.051 கி.மீ. தொலைவிலான இந்த வழித்தடத்தில் 2 சுரங்கப்பாதை ரயில் நிலையங்கள், 5 உயர்நிலைப்பாதை ரயில் நிலையங்கள் என ஏழு மெட்ரோ ரயில் நிலையங்கள் இடம்பெறுகின்றன.

இந்த வழித்தடத்தில் மெட்ரோ ரயில் பாதுகாப்பு ஆணையர் அபய் குமார் ராய் மற்றும் அவரது குழுவினர் வெள்ளிக்கிழமை ஆய்வைத் தொடங்கினர். வண்ணாரப்பேட்டை இருந்து தண்டையார்பேட்டை வரையிலான சுரங்கப்பாதைப் பணிகள் மற்றும் ரயில்நிலையங்களில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு வசதிகளை ஆய்வு செய்தனர்.

இந்நிலையில், மெட்ரோ ரயில் பாதுகாப்பு ஆணையர் இரண்டாவது நாளாக சனிக்கிழமையும் ஆய்வு மேற்கொண்டார். விம்கோ நகர், திருவொற்றியூர், காலடிப்பேட்டை, சுங்கச்சாவடி மெட்ரோ ரயில் நிலையங்களை ஆய்வு செய்தார். அவருடன் மூன்று பாதுகாப்பு துணை ஆணையர்கள் இருந்தனர்.

மெட்ரோ ரயில் நிலையங்களின் உட்புறத் தோற்றம், பல்வேறு கட்டுமானப்பணிகள், இயக்க முறைகள், நடைபாதை, தீயணைப்பு



வண்ணாரப்பேட்டை - திருவொற்றியூர் விம்கோ நகர் முதல் கட்ட விரிவாக்க திட்டத்தில் விம்கோ நகரில் இருந்து சுங்கச்சாவடி மெட்ரோ வரையிலான பணிகளை சனிக்கிழமை ஆய்வு செய்த மெட்ரோ ரயில் பாதுகாப்பு ஆணையர் அபய் குமார் ராய். உடன் சென்னை மெட்ரோ ரயில் மேலாண் இயக்குநர் பிரதீப் யாதவ், இயக்குநர்கள் ராஜீவ் நாராயண், திவேதி, ராஜேஷ் சதுர்வேதி உள்ளிட்ட உயரதிகாரிகள்.

செயல்பாடு, பயணிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள், அவசரத்தொலைபேசி வசதிகள், அறிவிப்புப்பலகைகள், மின் தூக்கிகள், நகரும்படிக்கட்டுகள், ரயில் தண்டவாளத்தின் அமைப்பு, சிக்னல் அமைப்பு போன்றவை ஆய்வு செய்யப்பட்டது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் பிரதீப் யாதவ், இயக்குநர் (திட்டங்கள்) ராஜீவ் நாராயண் திவேதி, இயக்குநர் (அமைப்புகள் மற்றும் இயக்கம்) ராஜேஷ் சதுர்வேதி மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர். இந்த ஆய்வு மூன்றாவது நாளாக ஞாயிற்றுக்கிழமை (பிப்.7) நடைபெறுவுள்ளது.